DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-39/2023

Prosecution witness – PW 4

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.முருகன் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused present.)

03.03.2026 – 01.45 PM

முதல் விசாரணை:-

1. நான் கடலாடி கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 முதல் 3 ஐ தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும்.

2. கடந்த 25.02.2023 ம் தேதி காலை சுமார் 07.00 – 08.00 மணிக்குள் கடலாடி அரசு மேல்நிலைப்பள்ளி அருகே உள்ள நல்லமருது என்பவரது வீட்டின் அருகே எதிரி வில்வதுரையை கல்லால் தலையில் அடித்து ஏற்பட்ட காயத்துடன் இருந்தார். எதிரி ஏற்கனவே மதுபாட்டில்களை விற்பனை செய்வார் என்பதால் எனக்கும் எதிரிக்கும் பேச்சுவார்த்தை இல்லை. மாரிமுத்துவும், வில்வதுரையின் மகனும் வில்வதுரையை கடலாடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்தார்கள். இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: -

என் வீடு கிடாக்குளம் செல்லும் சாலையில் நல்லமருதுவின் வீட்டிற்கு அருகே உள்ளது என்றால் சரிதான். எதிரி செந்துரான் வீடு நல்ல மருதுவின் வீட்டிற்கு அருகே உள்ளது என்றால் சரியல்ல. 4,5 வீடுகளுக்கு அடுத்து உள்ளது. சண்டை நடக்கும் போது நான் எனது வீட்டில் தான் இருந்தேன் என்றால் சரிதான். சத்தம் கேட்டு தான் நான் எனது வீட்டிலிருந்து சம்பவ இடத்திற்கு வந்தேன் என்றால் சரிதான். நான் எனது வீட்டில் இருந்ததால்

சம்பவ இடத்தில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. எதிரி வில்வதுரையை கல்லால் அடித்ததை நான் பார்த்தேன். எதிரி எந்த கல்லால் வில்வதுரையை அடித்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. சிமென்ட் கல்லினால் ஆன கல்லால் அடித்தார். வில்வதுரை எனக்கு சம்மந்தி என்பதால் அவர் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை எந்த தேதியில் எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் 25ம் தேதி காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். எதிரி கொடுத்த புகாரின் பேரில் என் மீதும் வழக்கு உள்ளது என்றால் சரிதான். அதன் பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நானும எதிரியும் பக்கத்து ஊரைச் சேர்ந்தவர் என்பதால் ஏற்கனவே மன வருத்தம் இருந்தது என்றால் எதிரி மது விற்பார் என்பதால் நாங்கள் பேசிக்கொள்வதில்லை. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் ஏதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.03 16:46:02 +0530